திருவள்ளுவர் ஆண்டு 2039

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி :102 பகுதி : 8 | ஆகஸ்டு - 08 | விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச்சங்கம் ★ 14-09-1901 ★ THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

# அம்மாவின் வாசனை....

உ.சண்முகநாதன்,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

தொட்டிலில் கிடந்த
என்னை....
எறும்போ
எதுவோ....
கடித்த போது
கதறி அழுதேன்
அம்மாவென்று.
எங்கிருந்தோ!
பறந்து வந்தாள்
சிட்டுப் போல அல்ல
காற்றாய்.....
பரிதவித்த மனசோடு
புயலாய்.....
அள்ளி அணைத்து
ஆரத்தழுவினாள்
தென்றலாய்.....
அவளின்
வாசனையால்
வலி பறந்தோடியது.
அவளின்
கந்தல் சேலையின்
முந்தானை தான்
என் கண்ணீர்த்துளியை
கரையேற்றியது.....
எனக்கும்
அகவை
விலைவாசி போல
எகிறினாலும்
என்......
அம்மாவின்
வாசனை
செந்தமிழாய்
பத்திரமாய்
எனக்குள்.....

# செந்தமிழ்

(தோற்றம் 1902)


தொகுதி : 102
பகுதி : 8
ஆகஸ்டு 2008

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2039




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

முகவை மன்னர் **நா.குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்

**ஆசிரியர்**

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்


**இதழ்மணம்** 3

**இலக்குவனாரும், குறள் நெறியும்** 4
(சென்ற இதழ் தொடர்ச்சி)
முனைவர். நெல்லை ந.சொக்கலிங்கம்

**பாண்டித்துரைத்தேவரின் பன்னூல் திரட்டிற்கு உ.வே.சா. வழங்கிய சிறப்புப் பாயிரம்** 15
முனைவர். மு.மீனா

**பாவலர் உருத்திரங்கண்ணனின் பாலைத் திணைப்பாடல்கள்** 17
முனைவர் அரசக்கண்ணன்

**அரச பெண்டிரின் அவலப் பாடல்கள்** 26
க.மோகன், எம்.ஏ, எம்.ஃபில்., பிஜி.டி.சி.ஏ.,

**எழில் ஐந்து** ஆறுவிரல் ஜம்பொறி 32

**வாசகர் வாசகம்** 34

**பெட்ரோல் விலையைக் கட்டுப்படுத்த கூட்டு நடவடிக்கை** 40

# இதழ் மணம்

தமிழறிஞர்களுக்கும் தமிழ்ப் பற்றாளர்களுக்கும் வணக்கம்.

தமிழ் இலக்கியச் செறிவு மிகுந்த கட்டுரைகளுடன் இவ்விதழ் மணம் பரப்பி மலர்ந்துள்ளது.

பேரா.இலக்குவனாரின் தமிழ்ப்பற்றையும் தமிழ்ப்பணியையும் சான்றாதாரங்களுடன் விளக்கிச் சொல்லும் *"இலக்குவனாரும் குறள்நெறியும்"* எனும் கட்டுரை தமிழ் மணம் பரப்பி நிறைவடைந்துள்ளது. வள்ளல் பொன்.பாண்டித்துரைத்தேவரின் தமிழ்த் தொண்டை நினைவு கூர்வதற்கு உ.வே.சா. வழங்கிய சிறப்புப் பாயிரம் வழிவகை செய்துள்ளது.

பாலைச்சுவையை அனைவரும் சுவைக்கும் வண்ணம் *"பாவலர் உருத்திரங்கண்ணரின் பாலைத் திணைப்பாடல்கள்"* என்னும் கட்டுரை அமைந்து இம்மாத இதழ் முழுவதும் சுவைபடுகிறது.

செல்வ வளத்துடனும் செல்வாக்குடனும் வாழ்ந்தாலும் இழப்பினால் நிகழும் பாதிப்பே எல்லா உயிர்களையும் தாக்குகிறது என்பதை, *"அரச பெண்டிரின் அவலப் பாடல்கள்"* என்னும் கட்டுரை நுட்பமாக வெளிப்படுத்தியுள்ளது.

வள்ளுவரின் கவித்திறனை ஒற்றைக்குறள் கொண்டு வெளிப்படுத்தும் *"எழில் ஐந்து"* என்னும் கட்டுரை எளிய தமிழில் மணம் பரப்புகின்றது.

நம் இதழின் மீது வாசகர்களுக்கும் தமிழறிஞர்களுக்கும் உள்ள பற்றினை வெளிப்படுத்தும் *"வாசகர் வாசகம்"* மனதிற்கு நிறைவு தருகிறது.

இவற்றுடன் இன்றைய பொருளாதார, அரசியல் களத்தில் முக்கிய செய்தியாகக் கருதப்படும் தினமணி நாளிதழின் தரவும் அமைந்து இம்மாத இதழைப் பௌர்ணமி நிலவாகக் கொணரும் மன நிறைவுடன் இவ்விதழ் உங்கள் கையில்—

ஆசிரியர்

# இலக்குவனாரும், குறள் நெறியும்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

முனைவர். நெல்லை ந.சொக்கலிங்கம்

## "இலக்கியம்" இதழ்

பேராசிரியர் விருதுநகரில் பணியாற்றிய போது 'இலக்கியம்' என்ற பெயரைப் பதிவு செய்து திங்கள் இருமுறை இதழாக (Fornightly) நடத்தியுள்ளார். சங்க இலக்கியம், தொல்காப்பியம், திருக்குறள் போன்ற நூல்களைப் பற்றிய இலக்கியக் கட்டுரைகள் இதில் வெளிவந்தன.

"கெடல் எங்கே தமிழின் நலம்?
அங்கெல்லாம் தலையிட்டுக்
கிளர்ச்சி செய்க" (தமிழியக்கம், பா.119)

என்ற பாவேந்தரின் தமிழியக்க உணர்விற்குப் பேரா.இலக்குவனார் செயல் வடிவம் கொடுத்தார்.

பம்மல் சம்பந்த முதலியாரின் சபாபதி நாடகம் அக்காலத்தில் திரைப்படமாக எடுக்கப்பட்டது. அப்படத்தில் வரும் தமிழாசிரியரைக் கேலிக்குரிய கோமாளியாகக் காட்டியிருப்பர். இதனைப் பேரா.இலக்குவனார் இலக்கியம் இதழில் வன்மையாகக் கண்டித்துத் தலையங்கம் எழுதியுள்ளதில் இருந்து தமிழையும், தமிழ்ப் புலவர்களையும் காக்கும் முயற்சியில் இவர் முயற்சி எடுத்து முன்னின்று போராடியுள்ளார் என்பது தெளிவாகின்றது.

"தமிழ்மொழிக் குயர்மொழி தரணியில் உளதென்று
வெகுளியற் றிருப்போன் வெறும்புல வோனே"

(அறுவகை இலக்கணம், 705)

என்னும் வண்ணச்சரபரின் வழியில் இலக்குவனார் செயற்பட்டுள்ளமை பெறப்படும்.

இன்று திரைப்படங்களுக்குத் தமிழ்ப்பெயர் வைத்தால் அரசு வரிச்சலுகை வழங்குகிறது. ஆயின் 1947–இலேயே பேராசிரியர், தியாகராச பாகவதர் தம் திரைப்படம் ஒன்றிற்கு 'ராஜமுக்தி' என்ற

வடமொழிப் பெயர் இட்டமையினைக் கண்டித்து எதிர்ப்புக் குரல் கொடுத்துள்ளார் என்பது இங்கே எண்ணத்தகும். சங்க இலக்கியம், இலக்கியம் என்னும் இவ்விரண்டு இதழ்களும் புத்தக வடிவிலே வெளிவந்தனவாம். 'சங்க இலக்கியம்' பற்றி நான் இந்துக் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் (1973 – 77) பிறர்வாயிலாகக் கேள்விப்பட்டுள்ளேன்; ஆனால் பார்த்ததில்லை, அண்மைக்காலத் திரைப்படப் பெயர்களைப் பார்க்கும்போது நாம் உண்மையிலேயே தமிழ்நாட்டில் தான் இருக்கின்றோமா என்று ஓர் ஐயம் எழுகிறது. ரன், கில்லி, இது தான்டா போலீஸ், போக்கிரி முதலான திரைப்படப் பெயர்களைப் பார்க்கும்போது,

> "தணிப்பரிதாம் துன்பமிது!
> தமிழகத்தின் தமிழ்த்தெருவில்
> தமிழ்தான் இல்லை!" (தமிழியக்கம், பா.22)

என்று பாவேந்தரைப் போல் நாமும் மனம் வருந்த வேண்டியுள்ளது!

> "சின்னபிழை ஏடெழுதும்
> கணக்காயன் செய்திடினும்
> திருநாட் டார்பால்
> மன்னிவிடும் ஆதலினால்
> ஏடெழுதும் வாழ்க்கையிலே
> விழிப்பு வேண்டும்" (தமிழியக்கம், பா.107)

என்பதனை உணர்ந்தமையினாலேதான் பேரா.இலக்குவனார் தமிழுக்குக் கேடு சூழ்வாரை எதிர்த்து எழுதினார்.

## குறள்நெறி

பேராசிரியர் இலக்குவனார் புதுக்கோட்டையைச் சேர்ந்த அண்ணல் திரு.பு.அ.சுப்பிரமணியனாருடன் இணைந்து திருக்குறள் கழகம் ஒன்றை உருவாக்கினார். மேலும் இவர் அக்கழகத்தின் சார்பில் 'குறள்நெறி' என்னும் திங்கள் இதழைப் புத்தகவடிவிலே வெளிக்கொணர்ந்தார்.

பேராசிரியர் குறளுக்குரிய நேரான விளக்கங்களை எழுதினார்; அர்த்தசாஸ்திரம் என்ற வடமொழி மூலத்தையே திருவள்ளுவர் குறட்பாக்களில் கூறியுள்ளார் என்று பேரா.வையாபுரிப்பிள்ளை கூறி வந்தார். அக்கருத்தை மறுத்துப் பேரா.இலக்குவனார், "பொய்யாமொழியாரும் பொய்யாபுரியாரும்" என்று தொடர்கட்டுரை எழுதிவந்துள்ள துணிவு எண்ணத்தகும். இப்படிச் செய்தவர் நம் இலக்குவனார் என்றால் தமிழ்பால் கொண்ட பற்றின் ஆழம் – உறைப்பு நன்கு புலப்படும்.

புதுக்கோட்டையில் தொடங்கிய குறள்நெறி இதழ், இலக்குவனார் ஈரோட்டிற்குச் சென்ற பின்னரும் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து 1959–ஆம் ஆண்டுவரை நடத்தப் பெற்றுள்ளது. சில ஆண்டுகள் இடைவெளிக்குப் பின் 1963–ஆம் ஆண்டு முதல் மதுரையிலிருந்து குறள்நெறி திங்களிருமுறை இதழாக மீண்டும் வெளிவந்தது.

ஒவ்வொரு இதழுக்கும் நோக்கம் உண்டு. இதே போன்று குறள்நெறிக்கும் ஒரு குறிக்கோள் இருந்தது. ஆமாம்! 'குறிக்கோள் இலாது நாம் கெட்டு' விடக் கூடாதன்றோ!.

"குறள் நெறியில் மக்கள் வாழ்ந்தால், அரசியல் நடந்தால், ஆட்சி செய்தால், மக்களின் அனைத்துத் துன்பங்களும் அகன்று விடும். மக்களைக் குறள்நெறியில் வாழச் செய்து தமிழைப் போற்றிடத் தூண்டுவதே குறள் நெறியின் நோக்கமாகக் கொள்ளப்பட்டது".

(என் வாழ்க்கைப்போர், ப.238)

இது பாவேந்தரின் தமிழ் நோக்குடன் ஒப்ப வைத்து எண்ணுவதற்கு உரியதாகும்.

"இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக்கும் நிலை எய்தி விட்டால்
துன்பங்கள் நீங்கும் சுகம்வரும் நெஞ்சினில்
தூய்மை யுண்டாகிடும்; வீரம் வரும்"

(பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி ப. 93)

என்பது தான் அது. வள்ளுவர் வழியில் நம் நாடு நடைபோட வேண்டும் என்று பேராசிரியர் விழைந்து விறுவிறுப்புடன் செயலாற்றினார். குறள்

நெறியின் தொடக்கவிழா மதுரையில் நடைபெற்றது. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் இதழைத் தொடங்கி வைத்தார். குறள் நெறி வெளியீட்டு விழாவின்போது "பேராசிரியர் இலக்குவனார் இரண்டு அரிய தொண்டுகள் செய்துள்ளார். ஒன்று தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அளித்தது; இரண்டு குறள் நெறியைப் பரப்பவும் தமிழைக் காக்கவும் இக்குறள் நெறி இதழைத் தொடங்குவது, இவற்றால் இவர் பிறவிப்பயன் பெற்றுவிட்டார்" என்று தொடங்கி வைத்த முத்தமிழ்க் காவலர் கூறியுள்ளமை அறியத்தகும். மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் தலைமையில் குறள்நெறித் தொடக்கவிழா நடைபெற்றது ஒரு சிறப்பாகும்.

குறள்நெறியில் முன்னணிக் கவிஞர்களும், பேராசிரியர்களும் கவிதைகளும் கட்டுரைகளும் வழங்கினர். ஆங்கிலப் பேராசிரியர் ஒப்பிலி "திருவள்ளுவரையும் சேக்சுபியரையும்" ஒப்பிட்டு ஆய்வுக் கட்டுரைகள் தீட்டினார். பேரா. தமிழண்ணல் வரைந்த 'முருகன் என்னும் தொன்மம்' என்ற கட்டுரை பலருடைய பாராட்டைப் பெற்றது. 'அறிஞர் அண்ணாவுக்கு நெஞ்சு விடுதூது' என்ற தொடர் கவிதையைப் பேராசிரியர் அ. சங்கர நாராயணன் எழுதி வந்தார். 'இந்தியால் தமிழ் கெடுமா ?' என்று விவாத மேடையாக அமைந்த சிந்தனைக் கட்டுரை பலருடைய எண்ணங்களை எடுத்துரைக்கும் களமாக விளங்கிற்று. தொடர்கதைகள் வெளிவந்தன. தமிழ்ப் பற்றாளர்களின் பாசறையாகக் குறள்நெறி இதழ் விளங்கிற்று என்று உறுதியாகக் கூறலாம்.

## குறள்நெறி இதழின் முகப்பும் பகுப்பும்

குறள்நெறியின் அட்டைப் பக்கத்தில் 'தமிழ்வாழ்க' என்னும் தலைமைக் குறிப்புடன் சேர, சோழ, பாண்டிய மன்னர்தம் இலச்சினைகள் (வில்அம்பு, கயல், புலி) பொறிக்கப்பட்டிருக்கும்.

ஆண்டு, திங்கள் இவற்றைக் குறிப்பிடும்போது திருவள்ளுவராண்டும், தமிழ் மாதப் பெயரும் நாளும் இருக்கும். இதனைத் தொடர்ந்து ஆங்கில நாள் ஆண்டு சுட்டப்பட்டிருக்கும்.

(எ.டு) திருவள்ளுவராண்டு 1997 புரட்டாசி 29–ஆம் நாள்
15.10.66 மலர் – இதழ் 18

'தமிழிலும் ஆங்கிலத்திலும் திங்களிருமுறை வெளிவருகின்ற தமிழியக்க இதழ்' என்னும் முகப்புக் குறிப்புடன் குறள்நெறி இதழ் வெளிவந்தது.

இதன் விலை 25 காசுகள். இது 'உரு' எனத் தமிழ் எண்களிலும், 25 காசு என ஆங்கில எண்களிலும் குறிக்கப்பட்டுள்ளது. இது மட்டுமன்று; இதழின் உள்ளே வரும் பக்க எண்களும் கூட இவ்வாறே குறிக்கப்பட்டுள்ளன. 20 பக்கங்கள் உடையதாக இவ்விதழ் வெளிவந்துள்ளது. 10¾" X 7½" அளவினதாக இதன் நீள அகலங்கள் உள. சட்டப்படி குறள்நெறி இதழ் பதிவு செய்யப்பட்டு எம்.7810 என்பதும் பொறிக்கப்பட்டுள்ளது. மதுரையிலிருந்து வெளிவந்த இதழில் ஆசிரியர் சி. இலக்குவனார் என்றும், பொறுப்பாசிரியர் இ. மறைமலை என்றும் அச்சிடப்பட்டு வெளிவந்தது. குறள்நெறியின் ஆண்டுக் கட்டணம் உருபா ஆறு; இரண்டாண்டுகளுக்கு உருபா பத்து ஆகும். இதழின் விருதுத் தொடர் போல ஏதாவது ஒரு குறள் ஒவ்வொரு இதழிலும் குறிக்கப்பட்டிருக்கும். இருபதாவது பக்கத்தில் ஆசிரியர், பொறுப்பாசிரியர் பெயர்களுடன் அச்சிட்ட இடத்தின் முகவரி "குறள் நெறி அச்சகம், திருப்பரங்குன்றம், மதுரை – 5, தொலைபேசி எண். திருநகர் 65" என்றும் அச்சிடப்பட்டுள்ளது.

ஓர் இதழின் தலையங்கம் ஆசிரியரால் பொதுநலன் கருதிக் கருத்துரைக்கும் பகுதியாகும். "பத்திரிகை அலுவலகத்தின் பெயரிலேயே ஒரு செய்தி குறித்த பத்திரிகையின் எண்ணங்களை வெளியிடுதல், ஒரு கூற்றுப் பற்றி நிலைய உரிமையாளர் அல்லது நிர்வாகியின் எண்ணமே தலையங்கம் ஆகும். முறையாக மேற்கொள்ளப்படும் ஒரு தலையங்கப் பகுதி ஒரு குழுவினரின், வட்டாரத்தினரின், ஒரு நாட்டின் கருத்தைத் தாங்கியதாக வரவேண்டும்" என்று மக்கள் தகவல் தொடர்பியல் கலைச் சொல்லகராதி (ப. 103) கூறும். இதற்கு ஏற்ற வண்ணம் சில இதழ்களில் பேரா. இலக்குவனார் தலையங்கம் தீட்டியுள்ளார். தேவை ஏற்படும் போது குறள்நெறியில் தலையங்கம் வரும். 'தமிழ் இதழியல் களஞ்சியம்' என்று மா.சு. சம்பந்தன் எழுதிய நூலில் குறள்நெறியில் வந்த தலையங்கம் இணைக்கப்பட்டுள்ளது இவண் சுட்டத்தகும்.

## உள்ளடக்கம்

குறள்நெறி இதழை வாழ்த்தி வாசகர் படைத்த கவிதைகள் வெளியாகியுள்ளன. சான்றுக்கு ஒன்று காண்போம்;

"சாயாத தமிழடைந்த கேடு தனைச்
சாய்த் தொழிக்க உலவிவரும் ஏடு! - என்றும்
ஓயாத தமிழ்ப் பணியால் ஓங்கிடுங் குறள் நெறியென்று
ஆடு - பள்ளுப் பாடு"

பேராசிரியர் இலக்குவனாரின் தனித்தமிழ்ப் பற்றில் யாருக்கும் ஐயம் கடுகளவு கூட ஏற்படாது. ஆனாலும் குறள்நெறியில் பட்டங்களை எம்.ஏ., எம்.ஒ.எல்., என ஆங்கில எழுத்துக்களாலேயே அச்சிட்டுள்ளார் என்பது சிறிது நமக்கு நெருடலாகவே உள்ளது.

## பொருள் பொதி கட்டுரைகள்

திருக்குறளை மையமாக வைத்து எழுதப்பட்ட சிறுகதைகள் இதில் வந்துள்ளன. புலவர் தி.நா. அறிவொளியின் கட்டுரைகள், வேளாண்மை இயல், மனைத்தோட்டங்களில் காய்கறி வளர்ப்பு, கோசுப் பயிர்கள், முகவை ஆடல்வல்லானின் தமிழிசைச் சொற்கோவை எனப் பல திறத்தன. பேராசிரியரின் 'தொல்காப்பிய விளக்கம்' தொடர்ந்து எல்லா இதழ்களிலும் வெளிவந்துள்ளது. தமிழிசைச் சொற்கோவைப் பணிக்கு இசைமணி கா.சங்கரனார், பேரா. சுந்தரசண்முகனார், பேரா.ஞா.தேவநேயப் பாவாணர், பாணர் ப.சுந்தரேசனார் போன்றோர் உறுதுணையாக இருந்துள்ளனர்.

நண்பர் திரு. கா. காளிமுத்து எழுதிய ஒருபக்கக் குறிப்புச் சில இதழ்களில் வெளிவந்துள்ளது. 'விடுதலைப் பறவை' பற்றிய உருவகம் ஒன்று வெளிவந்துள்ளது. இது பாவேந்தருடைய கிளிப்பாடலை நம் நினைவிற்குக் கொண்டு வருகிறது. பேரா. இலக்குவனார் தமிழ்க் காப்புத் தொண்டர்படை ஒன்றை உருவாக்கினார். இதன் உறுப்பினர்களின் முகவரிகளைத் தொடர்ந்து வெளியிட்டுத் தமிழ்ப் பற்றாளர்களை ஊக்கப்படுத்தி வந்துள்ளார்.

## குறள் நெறியின் தலையங்கங்கள்

தலையங்கத்தின் இன்றியமையாமையை உணர்ந்த 'கயலே வால்ட்ராப்' என்பார் 'தலையங்கம்' இடம் பெறாப் பத்திரிகையானது, 'முதுகெலும்பும் நாடும் இல்லா மனிதனையும், மறை திரை இல்லா வீட்டினையும், அழகுபடுத்தப்படாத கிறிஸ்துமஸ் மரத்தினையம் ஒக்கும்' எனத் தலையங்கத்தைச் சிறப்பிக்கின்றார். (துங்க மணியன், புலமை (காலாண்டிதழ்) தொகுதி – 3, பகுதி – 4, ப. 324).

இவரின் கூற்றுக்கு ஏற்ற வகையில் குறள்நெறியில் அவ்வப்போது பேரா. இலக்குவனார் எழுதிவந்துள்ள தலையங்கங்கள் விளங்கின எனலாம். சான்றுக்கு ஒன்றிரண்டை இங்கே காண்போம்.

1964–ஆம் ஆண்டு வந்த குறள்நெறியில் இலக்குவனார் தீட்டியுள்ள தலையங்கம் இங்கே நினையத்தகும். அது வருமாறு:

### ஆங்கில வழிக் கல்வி எதற்கு?

"கல்லூரிகளில் தமிழ் வழியாகக் கற்பிக்க வேண்டுமென்று கிளர்ச்சி நடந்து கொண்டிருக்கின்றது. சிலர் அதைப் பொருட்படுத்தாமல் உயர்நிலைப் பள்ளிகளில் மீண்டும் ஆங்கிலம் வழியாகக் கற்பிக்க ஆவன செய்து கொண்டிருக்கின்றனர். ஆங்கில அடிமைப் பற்று இன்னும் அகலவில்லையே! பிறமொழி வாயிலாகக் கற்பதால் அறிவு வளம் பெறாது என அறிஞர்கள் கூறியிருந்தும், அதுதான் வேண்டுமென்று செய்வார் செயல், உடல் நலத்துக்கு ஊறு செய்யும் ஒன்றைப் பெற்றோர் தடுத்தும் செய்யும் அறியாக் குழந்தையின் அடம் போன்றதாகின்றது.

தாய்மொழி அறிவின்றி, தாய்மொழியை மறந்து அயல்மொழி அறிவு பெறுவது எற்றுக்கோ? ஆங்கில நாடு சென்று ஆங்கிலேயராய் வாழப் போகின்றவர் போலும்! கொடுமை! கொடுமை! (குறள் நெறி, 15.6.1964).

இந்தி எதிர்ப்பை மையமாக வைத்துப் பேரா. இலக்குவனார் தீட்டியுள்ள தலையங்கம் அவருடைய உள்ளக் குமுறலை நன்கு வெளிப்படுத்தும், அத்தலையங்கம் இதோ:

## "மைய அரசுப் பள்ளிகள் – இந்தியைப் புகுத்த இன்னொரு புதியவழி"

மைய அரசுப் பள்ளிக்கூடங்கள் மாநிலங்களின் பெரிய நகரங்களில் திறக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் அப்பள்ளி ஒன்று மதுரையிலும் திறக்கப்பட்டுள்ளது. மைய அரசு தம் ஊழியர்களின் நலனைக் கருத்திற்கொண்டுதான் இப்பள்ளிக் கூடங்களைத் திறக்கின்றது என்பதில் ஐயப்பாடு கொள்கின்றோம். இந்தி மொழியைத் திணிப்பதற்கு இஃது ஒரு புதிய வழியென்றே கருதுகின்றோம். இந்தியைத் திணிக்கும் இப்புதிய ஏற்பாட்டை மைய அரசு உடனே நிறுத்த வேண்டும். மாநில அரசு தம் உரிமையை விட்டுக் கொடுத்தல் மாநில மக்களுக்கு இழைக்கும் பெரும் கொடுஞ்செயலாகும் (குறள்நெறி, 15.07.1966).

இதேபோன்று 'கல்வியும் வாழ்வும் – குடியரசுத் தலைவரின் இடித்துரை' என்ற தலையங்கம் (குறள்நெறி, 15.08.1966) அமைகின்றது.

நமது இந்தியக் கூட்டரசின் குடியரசுத் தலைவர் அண்மைக் காலங்களில் செல்லுமிடங்களில் நாட்டில் நிலவும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, அறம் சாரா வாழ்க்கை முறையை வெறுத்து அதற்குக் காரணமாய் உள்ளோரை வாரமின்றி இடித்துரைத்து வருவது போற்றத்தக்கது.

"சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு"

என்பது காண்க. கற்றவர் பலரும் இரட்டை வாழ்வே வாழ்கின்றனர். சொல்லில் ஒன்று; செயலில் பிறிதொன்று. இந்நிலை திருந்தாமல் சென்று கொண்டிருந்தால், பின் மக்கள் மாக்களாகவே மாறிவிடுவர் என்பதில் ஐயமில்லையன்றோ? (குறள்நெறி, 15.8.1966) என்று தம் காலக் கல்விச் சூழலைச் சுட்டிக்காட்டும் பேராண்மை நமக்கு நன்கு புலப்படும். இவ்வாறு பேராசிரியர் தலையங்கம் தீட்டிப் பலரின் முகத்திரைகளைக் கிழித்து எறிந்துள்ளனர்.

## பொதுநலச் செய்திகள்

பேராசிரியர் இலக்குவனார் பொதுநலம் பேணிய பெருந்தகை ஆவார். இதனை உறுதிப்படுத்தும் வண்ணம் அமைவது 'மதுரைப் பல்கலைக்கழகப் பேரவைத் (Senate) தேர்தலும் குறைபாடுகளும்' என்ற கட்டுரை. பதினைந்து பேருக்கு ஒருவர் வாக்களிக்கும் உரிமை இருத்தல் வேண்டும். ஆனால் இங்கு 'மாற்றக்கூடிய ஒற்றை வாக்கு முறையே' ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதனால் ஒரே வாக்குத்தான் ஒருவருக்குண்டு. பதினைந்து பேரில் ஒருவர்க்குத்தான் இவர் வாக்குப் பயன்படும். முப்பத்தாறு பேர்களில் பதினைந்து பேரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய உரிமையுடைய வாக்காளர் ஒரே வாக்குத்தான் அளிக்கலாம் என்பது மக்களாட்சி முறைக்கு ஏற்றதன்று (குறள்நெறி, 15.08.1966) என்று குரல் கொடுத்தமையால் பேராசிரியரின் பொதுநல உணர்வு தெற்றென விளங்கும்.

குறள்நெறியில் அரசியல் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள் இசைவிளக்கங்கள், சிறுகதைகள், இலக்கண விளக்கங்கள் போன்றவை மட்டும் வெளிவரவில்லை; பொருளாதாரக் கட்டுரைகளும் நாட்டு நடப்புகளும் வெளிவந்துள்ளன. அவற்றுக்கும் குறள்நெறியில் பேராசிரியர் வாய்ப்புகள் வழங்கித் தம் ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார். அப்படி அமைவதுதான் "உருபா மதிப்புக் குறைந்ததன் விளைவு – நடுவணரசு அறிவிப்பால் ஏற்பட்ட விளைவு விலைவாசி ஏற்றம்" என்பது குறித்த ஒருவருடைய கருத்துரை. இவ்வாறு பொதுநலன் – சமுதாய நலன் – நாட்டு நலன் எனப் பேராசிரியரின் விரிந்த பார்வைக்குக் குறள்நெறி வித்திட்டது.

ஞாலப்பார்வை தானே பாவேந்தர் பாரதிதாசனாரின் பைந்தமிழ்ப்பாடல் கூறுவது. ஆம்! பேரா. இலக்குவனார் தாயுள்ளம் கொண்ட ஞாலப் பார்வையாளராக விளங்கினார் எனலாம்.

## சான்றோர் தம் சிந்தனைகள்

குறள்நெறியில் தமிழ்ச் சான்றோர்களின் தமிழ்க் காப்புணர்ச்சி, தமிழ்வளர்ச்சி, எதிர்காலத்திட்டம், சமுதாய மறுமலர்ச்சி, மாற்றம் பற்றிய சிந்தனைகளையும் பேராசிரியர் வெளியிட்டுத் தொண்டாற்றியுள்ளார். சான்றாக ஒன்று : 1.10.66–இல் வந்த இதழின் அட்டைப்படம் எழுஞாயிறு

தீட்டப்பட்டு, இதன்மேல் "ஞாயிறு போற்றுதும் ஞாயிறுபோற்றுதும்" என்னும் சிலப்பதிகார அடிகளும், படத்தின் கீழே,

"கடுஞ்சினத்த கொல்களிறும்
கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும்
நெஞ்சுடைய புகல்மறவரும் என
நான்குடன் மாண்டதாயினும்
மாண்ட அறநெறிமுதற்றே அரசின் கொற்றம்"

என்ற மதுரை மருதனிளநாகனார் தம் புறப்பாடலையும் பொறித்து இதழை வெளியிட்டுள்ளார்.

மொழிநூற்புலவர் ஞா.தேவநேயப்பாவாணர் எழுதிய "தமிழ்ப் பேராசிரியர் தலையாய கடமை" 1.10.66–இல் வெளிவந்த கட்டுரை நம் எல்லோரின் கருத்தையும் கவர்வதாக இருக்கிறது. இக்கட்டுரையில் தமிழைத் திருந்தப் பேசல், தமிழைப் பிழையறக் கற்றல், தமிழை வளர்த்தல், தமிழைக் காத்தல், தமிழைப் பரப்பல், தமிழ்ப் புலவரைப் போற்றல் எனப் பல செய்திகளைப் பாவாணர் எடுத்துரைத்துள்ளார். 1966–இல் இருந்த நிலைதான் இன்றும் உள்ளது என்பது நமக்கு மிகுந்த வேதனையைப் தருகிறது.

## *குறள்நெறியில் என் பங்கு*

குறள்நெறியில் ஆண்டுக் கட்டணம் செலுத்திய உறுப்பினராக என்னை ஆட்படுத்திக் கொண்டேன். நெல்லைப் பகுதிக்குப் பேராசிரியர் வரும்போது 'நல்லாரைக் காண்பதுவும் நன்றே' எனத் தவறாமல் அவரைச் சந்தித்து உரையாடுவது என அவருடன் தொடர்பு கொண்டிருந்தேன்.

குறள்நெறியில் அவ்வப்போது கட்டுரைகள் எழுதி வந்துள்ளேன். அவற்றுள் சில வருமாறு :

| | |
|---|---|
| மன்னுயிரெல்லாம் தொழும் மாண்பு | (15.6.65) |
| முரசு கொட்டு | (கவிதை – 15.10.65) |
| உலக உள்ளங்கள் | (நூல் மதிப்புரை – 1.11.65) |

| | |
|---|---|
| புகழேற்றி வரும் புதுவைக் குயில் | (15.4.66) |
| தலைமைச் சுருக்கம் | (1.5.66) |
| காப்பாரிற் பார்ப்பார் மிகும் | (15.6.66) |
| வேறுபாடுணர்த்திய வியன்றமிழ்ப் புலவர் | (15.8.66) |
| பாதியின் வழி | (15.9.66) |
| வேலும் கோலும் | (1.11.66) |

இப்படிப் பேரா. இலக்குவனார் தமிழ்ப்பற்றாளர்களின் உணர்வுகளை மேலும் சிறக்கச் செய்யக் குறள்நெறி வாயிலாக ஊக்கம் தந்து வரவேற்றுப் போற்றியுள்ளார்.

## பேராசிரியரின் கனவு

குறள்நெறியைப் பேரா. இலக்குவனார் திங்களிரு முறையிலிருந்து நாளேடாக வெளியிட பெரிதும் விழைந்தார். அவ்வப்போது குறள்நெறி இதழில் அறிவிப்பும் வெளியிட்டுள்ளார். திருக்குறள், தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் ஆகியவற்றைக் கல்வி அறிவு வாய்க்கப் பெற்ற எல்லோரும் அறிந்து கொள்ளச் செய்யவேண்டும் என்று அவர் நீள நினைந்தார். தமிழ் உணர்வும் தமிழ்க் காப்புணர்ச்சியும் மக்களிடம் பெருக்கெடுக்க வேண்டும் என அவர் அயராது பாடுபட்டார். பணி இழப்பும், சிறைவாழ்வும் அவரை வருத்தியபோது தமிழும், தமிழரும் உயர்நிலை பெற்றுச் சிறக்க வாழவேண்டும் என்ற குறிக்கோளுடன் குறள்நெறியைப் பேராசிரியர் நடத்தினார் என்று கூறுவதே மிகப் பொருத்தமாகும்.

## துணைநின்ற இதழ்களும் நூல்களும்

1. சி.இலக்குவனார், மறைமலை இலக்குவனார், சாகித்திய அகாதமி, புதுதில்லி, 2007.

2. செந்தமிழ்க்காவலர், சி. இலக்குவனார், இரா. இளங்குமரன், இலக்குவனார் இலக்கிய இணையம், சென்னை,2002.

3. மா.சு. சம்பந்தன், தமிழ் இதழியல் களஞ்சியம், பாரிநிலையம், சென்னை, 1990.

4. குறள்நெறி இதழ்கள், 1965 – 1966.

# பாண்டித்துரைத்தேவரின் பன்னூல் திரட்டிற்கு உ.வே.சா. வழங்கிய சிறப்புப் பாயிரம்

படிக்கதிலிருந்து எடுத்துதவியவர்
முனைவர். மு.மீனா
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

கிடைத்தற்கரிய தமிழ்நூல்களைத் தேடித்தேடி பதிப்பித்தவர் தமிழறிஞர் தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள். அவரின் தமிழ்ப்பதிப்புகளுக்குப் பேருதவியாக இருந்தவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர் வள்ளல் பொன்.பாண்டித்துரைத் தேவரவர்கள். தேவர் அவர்களும் அரிய நூல்களைத் திரட்டி "பன்னூல் திரட்டு" என்னும் நூலைப் பதிப்பித்தார். அந்நூலுக்கு உ.வே.சா. அவர்கள் வழங்கிய சிறப்புப் பாயிரம்.

"அருமறை நாவின் அந்தணர் தமக்கும்
ஆறறி காட்சிப்பேறுடை யார்க்கும்
திசைபோம் பெரும்புக ழிசைவல் லவர்க்கும்
செயிரிலாத் தேர்ச்சி வயிரியர் தமக்கும்
மற்றவை மரபிற் கற்றவர் திரட்டும்
மாதுய ரொடுவரும் ஆதுலர் தமக்கும்
அடையா வாயில கன்கடை யுடையான்
வாய்ந்தநுண் ணூல்பல வாய்ந்து மகிழ்ந்தே
நாவலர் பல்லோர் பாவலர் பல்லோர்
சூழும்படி தழீஇ வாழும் பெருமையன்
அன்னமும் ஆவும் அன்னமா ணவர்பலர்க்கு
அனமும் தனமும் ஆடையும் மேடையும்
கொடுத்தே மிடியைக் கெடுத்தே மகிழ்வித்
தருந்தமிழ் பயிற்றிப் புரந்திடு மேன்மையன்
தீயவெம் பிணியா லாயபஃறுன்பிற்
சாற்றா மாந்தர்க் கருந்துணை யானோன்
இருவே றுலகத் தெறுங் குறடற்கெதிரா
வருவேள் ஒழுக்க மாண்பினில் அதிகன்
குளிர்இன் சொல்லொடு மிளிர்குலோத் துங்கன்
அகத்துாக் கேமுனம் தொகுத்தே மென்னும்
அக்குறை யறவரும் உக்கிர பாண்டியன்
வருத்த மகற்றும் திருத்தகு தேவன்
களங்க மில்லாது விளங்கு பொய்யாமொழி

மெச்சி யடைந்து நச்சினார்க் கினியன்
தீதிய லாதுசெய் நீதிநூல் பலவும்
தெரிமே லவர்சொல் பரிமே லழகன்
பொழிப்பார்க்கு மேனி அடியார்க்கு நல்லான்
புலவர்கள் துயர்களைந் திலகு கற்பகம்
வந்தடை வோர்துயர் சிந்து சிந்தாமணி
மண்ணிலும் மீக்கிளர் விண்ணிலும் அமைந்த
வண்மையன் எனவே ஒண்மையி னாலுயர்
சீரியர் சொலமிளிர் பாரி சாதம்

தால மாந்தரின் தாலந் துறந்தெனத்
தாலம் துறக்கும் தமிழ்த்தொன் னூல்கள்
பழுதா காவணம் பரிசோ திப்பித்
தெழுதா வெழுத்தில் இயைவித் திடுவோன்
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணை
யாக நினைப்போர் சோகம் அகற்ற
வானினும் ஆனினும் வழங்குசெங் கரத்தான்
தேனினும் பாலினும் தித்தித் தோங்கும்
தண்பா மாலை சாற்றுவோன் புறப்பொருள்
வெண்பா மாலை வெளிவரச் செய்தோன்
திருந்து கவின்சேர் அருந்தமிழ் மடந்தை
அணிமே கலையாம் மணிமே கலையை
யாவரும் பெறச்செய் மாவுப காரி
பண்ணமை விழுச்சீர்த் தண்ணுமை யொடுங்களத்து
ஏழிசை யோடும் யாழிசை யோடும்
எழுது மறைகள் இசைத்தே அன்பில்
தொழுது பல்லோர் சூழ்ந்திருந் தேத்த
உருத்திர சின்னம் அருந்தியிற் றாங்கி
மனமொழி மெய்யினிற் றினமொழி வின்றி
யீசனை அன்பிற் பூசனை புரிவோன்
சிவனடியவரைச் சிவனென மதித்து
வேண்டிற் றுதவும் விழுச்சீர்ப்
பாண்டித் துரைப் பெயர் படைத்த கோமானே"

உ.வே.சா. அவர்களுடைய இந்தச் சிறப்புப் பாயிரம் செந்தமிழ் வளர்த்த வள்ளலின் நல்லியல்புகளை உலகிற்குணர்த்தியது.

# பாவலர் உருத்திரங்கண்ணரின் பாலைத் திணைப்பாடல்கள்

முனைவர் அரசக்கண்ணன்
தஞ்சாவூர்.

சங்க நூல்கள் எனப்படும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களில் பாவலர், கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய இரண்டு பாடல்கள் பத்துப்பாட்டிலும், இரண்டு பாடல்கள் எட்டுத்தொகையிலும் உள்ளன. பத்துப்பாட்டில் பாவலர் பாடிய பெரும்பாணாற்றுப்படை என்பது ஆற்றுப்படை நூலாகும். இந்த ஒரு பாட்டு நீங்கலாகப் பாவலர் பாடிய மூன்று பாடல்களும் பாலைத் திணைப் பாடல்களாகும். பாலைத்திணை ஒழுக்கத்தைப் பாவலர் வெளிப்படுத்தியிருக்கும் திறம் சிறப்புடைத்து; தனித்து நோக்குதற்குரித்து.

ஐந்திணை அகவொழுக்கங்களில் பாலை என்பதும் ஒன்று. பாடல் சான்ற புலனெறி வழக்கில் பாலை என்பதற்கு 'பிரிதல்' என்று பொருள். பிரிதற்குரிய நிமித்தங்களும் பாலை எனப்படும். பிரிவின் துயரமே களமாகக் காதலர்களின் ஆழமான உணர்வுகளை, அழகான முறையில் சொல்லோவியமாகச் சொல்ல இடந்தருவது பாலைத்திணையாகும். உருத்திரங்கண்ணனார் இப்பாடல்களில் காதல் நெஞ்சங்கள் பிரிவால் படும் வேதனையை மிகவும் உருக்கமாகக் காட்டுவார்.

## குறுந்தொகை

எட்டுத்தொகையில் உள்ள குறுந்தொகை 352 ஆம் பாடல் தலைவன் பொருளீட்டத் தலைவியைப் பிரிகிறான். ஆற்றாளாகி வருந்திய தலைவி தன் துயரத்தைத் தோழிக்குக் கூறுவாள்.

அந்தப் பாடல்,

"நெடுநீர் ஆம்பல் அடைப்புறத் தன்ன
கொடுமென் சிறைய கூர்உகிர்ப் பறவை
அகல்இலைப் பலவின் சாரல் முன்னிப்
பகல்உறை முதுமரம் புலம்பப் போகும்
சிறுபுன் மாலை உண்மை
அறிவேன் - தோழி - அவர்க்காணா ஊங்கே" - என்பதாம்.

மென்மையான சிறகினையும், நீண்ட நகங்களையும் உடைய வெளவால் பகற்பொழுதில் முதுமரத்தில் தங்கியிருக்கும். இரவு தொடங்கும் மாலைப்பொழுதில், அகன்ற இலைகளையுடைய, பலாமரங்கள் உள்ள மலைச்சாரலை நோக்கிப் போய்விடும். அதனால் அம்முதுமரம் புலம்புதற்போல், பொருள் உன்னிப் பிரிந்த தலைவனால் தலைவி புலம்பிக் கூறுவாள்.

மாலை வந்தால் பிரிந்த காதலர்களுக்குத் துன்பம் வரும். "அவரைக் காணாதவிடத்தே தான், மாலையென்று ஒன்று உண்டென்று யான் உணர்கின்றேன்" என்பாள் குறுந்தொகைத் தலைவி.

"காதலர் இல்வழி மாலை கொலைக் களத்
தேதிலர் போல வரும்".[1] - என்று குறள் கூறும்.

குறுந்தொகைக் கருத்தை அப்படியே தழுவி, "மாலை நோய் செய்தல் என்பதை அவர் அகலாதபோது அறிந்திலேன்" என்று குறளில் வரும் தலைவி கூறுவாள். அக்குறள்,

"மாலை நோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்தது இலேன்[2]" - என்பதாம்.

### அகநானூறு

எட்டுத் தொகையில் நெடுந்தொகை எனப்படும் அகநானூறு 167 – ஆம் பாடல்,

"வயங்கு மணி பொருத வகையமை வனப்பின்" என்று

தொடங்கி, "போர்மடி நல்லிறைப் பொதியிலானே" என்று ஈற்றடி அமைய 20 அடிகள் கொண்டதாகும். பள்ளியில் தலைவியோடு இன்புற்றிருந்ததையும், பொருள் தேடச் சென்றால் உறும் வழித்துன்பத்தையும், தன்நெஞ்சிற்குக் கூறி செலவழுங்குவான் இப்பாடல் தலைவன்.

## பாடற்பொருள்

நகரில் இருக்கும் வானளாவிய மாளிகையில், வேலைப்பாடமைந்த, புனையப்பட்ட பள்ளியில், அழகிய அணிகலன்களாகிய மேகலையணிந்த மா அயோளொடு இன்று முழுவதும் இனிதாய்க் கழிந்தது.

*வணிகச் சாத்தனைக் கொன்று, அவர்பொருளைக் கவர்ந்து* உண்ணும் வருத்தத்தைச் செய்யும் அம்பினையும், வளைந்த வில்லையும் கொண்ட மறவர்களுக்கு அஞ்சி ஊரை விட்டுக் குடிகள் பெயர்ந்துவிட்டமையால், அவ்வூர் வளமற்று, பாழிடத்துப் படரும் பீர்க்கங்கொடிகளே படர்ந்துள்ளன. அங்கு படப்பையிலுள்ள முருங்கைகளை யானைகள் வந்து தின்றுவிட்டுப் போகின்றன. யானைகள் வந்து செல்வதால் அவற்றின் முதுகு உராய்ந்து விட்டங்கள் வீழ்ந்துவிட்டன. அதனால் வாழ்வதற்கு இடனின்று மணிப்புறாக்களும் அவ்விடத்தை நீங்கின.

கடவுள் உருவம் எழுதி அம்பலத்தே ஊர்மக்கள் வழிபடுவர். அந்நிலைமை இன்மையால் கடவுளும் புறத்தே போய்விடப் பொலிவிழந்து, தெய்வத்திற்குப் பொருள்கள் படைக்கப்படுவதும் மறந்து போனது.

மெழுகப்படாத புல்லிய திண்ணையில், ஈன்றணிமையுடைய நாய் தங்கியிருந்ததால் இடம் தேய்வடைந்தது. அச்சிற்றில்லில் அமைந்திருந்த கைம்மரங்கள் சிதைந்து போகுமாறு பரவி, வேலின் முனைபோன்று கூரிய முகத்தினையுடைய கறையான் புற்றுமண் கொண்டு

மூடிக்கொண்ட, கூரைமடிந்த நல்ல இறப்பினையுடைய ஊர்ப்பொது அம்பலத்தில், தனிமையுற்றுத் தூங்காத கண்களோடு, துயரால் புலம்பி, நாளைய பொழுதில் தங்கியிருப்போமா? மாட்டோம் என்று தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுவது,

"நாளைப்
பொருந்தாக் கண்ணேம் புலம்புவந்து உறுதரச்
சேக்குவம் கொல்லோ நெஞ்சே!"[3] - என்பதாம்.

இவ்வாறு இன்றைய இன்பத்தையும், நாளைய துன்பத்தையும் கூறிப் பிரிதல் நிமித்தமாக இயன்ற பாடலாகும். பிரிதல் நிமித்தம் என்பது பிரிதலைத் தற்காலிகமாகக் கைவிடுதலாகும். பின்னர்த் தலைவியைத் தேற்றிப் பிரிதலாகும். இதனை,

"செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே
வன்புறை குறித்த தவிர்ச்சி ஆகும்"[4]

என்று தொல்காப்பியம் கூறும்.

அம்பலத்தின் அவல நிலையை உள்ளது உள்ளவாறு சொல்லோவியமாகப் படைத்திருப்பது உருத்திரங்கண்ணரின் படைப்பாற்றலை வெளிப்படுத்தும்.

## பட்டினப்பாலை

301 அடிகளைக் கொண்ட இப்பாட்டு, பிரிதல் நிமித்தமாக அமைந்து வஞ்சிநெடும் பாட்டு எனவும் வழங்கப்பெறும். பட்டினப்பாலைத் தலைவன், முற்கூறிய அகநானூற்றுத் தலைவன் போல் வழிச்செல்லும் துன்பத்தைக் கூறியும், தலைவியைப் பிரிதல் இயலாதவனாய் செலவழுங்குவான். இவ்வாறு இருபாட்டுக்களும் ஒன்றோடொன்று உறழ்வுடையன. ஆனால் பட்டினப்பாலைத் தலைவனோ 'முட்டாச்சிறப்பின் பட்டினம் பெறினும்' தலைவியைப் பிரியேன் என்பான்.

## முட்டாச்சிறப்பின் பட்டினம்

திருமாவளவன் என்ற கரிகாற்சோழன் கடற்கரை நகரமாகிய காவிரிப் பூம்பட்டினத்தைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்தான். சோணாட்டில்,

"வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத்தலைஇய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்"[5].

வற்றாத காவிரியால் விளைச்சல் அறாது நடந்து, வளமுடையதாய் நாடு செழித்திருந்தது.

கருப்பஞ்சாறு காய்ச்சும் கெட்டில்களில் எழும்புகை நெய்தல் மலர்களில் படிய அம்மலர்கள் வாடும். நெற்கூடுகளின் நிழலில் நெற்கதிர்களை உண்ட எருமைகள் உறங்கும். இயற்கை வளம் எங்கும் நிறைந்திருக்கும்.

உலர வைத்திருக்கும் தானியங்களைத் தின்னவரும் கோழிகளைக் காதணிகளைக் கழற்றி வீசி விரட்டுவர் மடநோக்கின் நேரிழை மகளிர். அவ்வணிகள் 'பொற்காற் புதல்வர் ஓட்டும் முக்காற் சிறுதேர்முன் வழி விலக்கும்' இப்பகை தவிர கலங்குபகை நாட்டில் இல்லை.

*அட்டில் சாலைகளில்* இருந்து சோறுவாக்கிய கொழுங்கஞ்சி, ஆறு போலப் பரந்தோடும்!

கடற்கரைவாழ் பரதவர் களிப்போடும், செழிப்போடும் வாழும் காவிரித்துறை, மேலுலகத்தை ஒப்பதாய் உள்ளது என்று "பெறற்கு அருந்தொல்சீர் துறக்கும் ஏய்க்கும்"[6] என்பார் பாவலர்.

காவிரிப்பூம் பட்டினத் துறைமுகத்தில்,

"வான்முகந்த நீர்மலைப் பொழியவும்,
மலைப்பொழிந்த நீர்கடல் பரப்பவும்,

மாரிபெய்யும் பருவம் போல,
நீரினின்று நிலத்து ஏற்றவும்,
நிலத்தினின்று நீர்ப் பரப்பவும்
அளந்து அறியாப் பல பண்டம்
வரம்பு அறியாமை பல பண்டம்
வரம்பு அறியாமை வந்து ஈண்டி"[7]

என ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்கள் அளந்து அறிய முடியாதவாறு குவிந்து கிடந்தன.

அம்மட்டோ! கடல்வழி வந்த குதிரைகள், நிலவழிவந்த மிளகு மூட்டைகள், இமயமலைப் பிறந்த மணியும், பொன்னும், பொதியமலைப் பிறந்த சந்தனமும்; அகிலும், தென்கடல் முத்தும், குணகடல் பவளமும், கங்கையாற்றுப் பொருள்களும், காவிரி தந்த வளங்களும், ஈழத்து உணவுப்பண்டங்களும், சீனத்துக் கருப்பூரம், குங்குமம் முதலியனவும், அரியதும், பெரியதுமாகிய பிறபொருள்களும் வந்துசெறிந்த வளம் தலைமயங்கிய தெருக்கள் பட்டினப்பாக்கத்தில் பல இருந்தன.

ஓங்கி உயர்ந்த, இந்தக் காவிரிப் பூம்பட்டினத்தையே உரிமையாகத் தருவதாயினும், நீண்ட கரிய கூந்தலும், ஒளிவீசும் அணிகலன்களையும் அணிந்த தலைவியைப் பிரியேன், நெஞ்சே நீ வாழ்க! என்பான் தலைவன். அக்கூற்று,

"முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும் -
வார்இருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன்; வாழிய நெஞ்சே"[8] - என்பதாம்.

## வேலினும் வெய்ய கானம்

கரிகாற்சோழன் கூட்டில் அடைக்கப்பட்ட புலிக்குட்டிபோல் பகைவர் சிறை நீங்கிப் பாய்ந்து வெளிவந்து, அவர்களை வென்று அரசுரிமை பெற்றவன். தொடர்ந்து தன்கூரிய வேலுக்கு வேலை

கொடுத்து வெற்றிகளைக் குவித்தவன். ஆனால் "பெற்றவை மகிழ்தல் செய்யான்"[9] நிறைவுடையான்.

மேலும் படையெடுத்துப் பகைவரது நாட்டைப் பாழ்படுத்தினான். வயல்கள் அழிந்தன. மலர்கள் நிறைந்த பொய்கைகள் வற்றின. மகளிர் விளக்கேற்றித் தொழும் அம்பலங்களில் காட்டு யானைகள் பிடிகளுடன் கூடி இருந்தன. மன்றங்களில் ஆண் பேய்களுடன் பிணந்தின்னும் பேய்கள் ஆடின. கிளிகள் இருந்து இனிய பேச்சுக்களைப் பேசிக் கொண்டிருந்த குதிர்களில் கோட்டான்கள் கூடி ஒலித்தன. மன்றங்களில் அருகும் நெருஞ்சிமுள்ளும் முளைத்தன. அவ்விடங்களில், நரிகளும், ஆந்தைகளும் வாழ்வதாயின. பாழ்பல செய்தும்,

"மலை அகழ்க்குவனே; கடல் தூர்க்கு வனே;
வான் வீழ்க்குவனே; வளிமாற்றுவன்"[10],

என முழங்கிக் கரிகாற்சோழன் எறிந்தவேல், பல ஒளி நாட்டாரைப் பணிந்து ஒடுங்கச் செய்தது. அருவாள நாட்டரசரும் அஞ்சி ஏவிய தொழில் கேட்கச் செய்தது. வடவர் வாட, குடவர் கூம்பத் தென்னவனாகிய பாண்டியன் திறல் கெடப் பொதுவர் பொன்ற, இருங்கோவேள் மருங்கு சாயச் செய்தது.

இத்தகு வேலினும் கொடியது பொருள் தேடச் செல்லும் காடு எனத் தலைவன் கூறுவான்.

## கோலினும் தண்ணியதோள்

உட்பகை வீழ்த்தி, அரசுரிமை ஏற்ற கரிகாலன் வெளிப்பகை அழித்துப் பகை நாடுகளைப் பாழ்படுத்தியமையால் அவன் நாட்டில் மூ—'கலங்குபகை'[11] இல்லை. மாற்றாரை ஒடுங்கச் செய்த கரிகாலன், தன்னை ஆக்கப்பணிகளுக்கு ஆக்கினான்.

"காடுகொன்று நாடாக்கி
குளம் தொட்டு வளம் பெருக்கி"[12] னான்;

பின்னர் மாடமாளிகையுடைய உறையூரை விடுத்து, காவிரிப் பூம்பட்டினத்தில் குடியேறி அங்குக் கோயில்களையும், குடிகளையும் நிலைபெறச் செய்தான்.

"திருநிலை இய பெருமன்னெயின்"[13] என்று திருமகள் அங்கு அழகுபெற நிலைத்திருந்தாள்.

"பாடல்ஓர்ந்தும் நாடகம் நயந்தும்
வெண்நிலவின் பயன்துய்த்தும்"[14]

இனிதாகக் காவிரிப் பூம்பட்டினத்து மக்கள் வாழ்வாராயினர்.

இதனால் கரிகாற்பெருவளத்தான் செங்கோல் குளிர்ச்சியானதாய் இருந்தது புலனாகும். இக்கோலினும் குளிர்ச்சியானது தன் தலைவியின் பரந்த மென்தோளே என்பான் தலைவன். செல்லாமைக்குரிய காரணியங்களாகத் தலைவன்,

"திருமாவளவன் தெவ்வர்க்கு ஓக்கிய
வேலினும் வெய்ய கானம்; அவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே"

எனக் கூறிச் செலவழுங்குவான்.

## முட்டாச் சிறப்பின் பட்டினப்பாலை

கரிகாற்சோழன் சிறப்புகளைக் கூறுவதே இந்நூல். ஆதலின் அவனே பாட்டுடைத்தலைவன் ஆவான்.

நூலின் பெருமை கருதிக் கரிகாற்சோழன் உருத்திரங் கண்ணார்க்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்தான் என்பதை,

"தழுவுசெந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொடு ஆறு நூறாயிரம் பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டது."[15]

என்ற கலிங்கத்துப் பரணியில் வரும் பாடலால் அறியலாம்.

பட்டினத்தையும், பிரிதல் நிமித்தமான பாலையையும் சேர்த்து இந்நூல் பட்டினப்பாலை எனப் பெயர் பெற்றது. இது நூற்பெயர்ச் சிறப்பாய் நிற்கிறது. பட்டினமே பெறினும், தலைவியைப் பிரியேன் என்ற தலைவனின் ஒப்பற்ற காதலை ஓதும் இந்நூல் கரிகாற் பெருவளத்தான் வரலாறு மட்டுமல்ல, உலக இலக்கியத்தில் இறவாத காதல் வரலாறாகவும் நிலைத்து நிற்கிறது!

## பட்டினப்பாலை பரவல்

"முட்டாச் சிறப்பின் பட்டினப்பாலை
விரும்பிக் கொள்வேன் வயங்கிழை விரும்பேன்
எட்டா இன்பம் தமிழால் எட்டுமே!"

1. திருக்குறள், 1224.
2. திருக்குறள், 1221.
3. அகநானூறு, 167: 5–7
4. தொல்காப்பியம், கற்பியல், 44
5. பட்டினப்பாலை, 5–7.
6. பட்டினப்பாலை, 104
7. பட்டினப்பாலை, 126–132.
8. பட்டினப்பாலை, 218–220
9. பட்டினப்பாலை, 228.
10. பட்டினப்பாலை, 271–272
11. பட்டினப்பாலை, 26.
12. பட்டினப்பாலை, 283–384.
13. பட்டினப்பாலை, 291
14. பட்டினப்பாலை, 113–114
15. கலிங்கத்துப்பரணி, இராசபாரம்பரியம், 21: 22–24.

# அரச பெண்டிரின் அவலப் பாடல்கள்

க.மோகன், எம்.ஏ, எம்.ஃபில்., பிஜி.டி.சி.ஏ.,
அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி

பண்டைய தமிழ் நாகரிகம், மொழிச் சிறப்பு முதலானவற்றை அறிய விரும்புவோர்க்குச் சான்றாதாரமாக, செய்தி ஊற்றாக அமைவது சங்க இலக்கியம். சமூக வாழ்வில் மக்கள் அனைவரும் கண்டு அறிந்து அனுபவித்து மகிழ்வதைப் புறம் எனவும், தலைவன்–தலைவி இருவரிடையே முகிழ்க்கும் உறவையும், இல்வாழ்க்கையையும் அகம் எனவும் தமிழ்ச் சான்றோர் பகுத்துக் கண்டனர். போரில் புறம் காட்டா வீரர்களையும், தம் மக்களைப் போருக்குத் தெருட்டித் துணிவு தந்தனுப்பிய நற்றாய்களையும் பாராட்டுதல் சங்க இலக்கியத்தில் காணப்பெறுகிறது. அத்தகைய சங்க இலக்கியத்தில் 45 பெண் புலவர்கள் இருந்துள்ளனர். அவர்களுள் ஆதிமந்தியார், பாரி மகளிர், பூதப்பாண்டியன் மனைவி பெருங்கோப் பெண்டு ஆகிய மூவர் மட்டுமே அரச பெண்டிருள் புலவர்களாக இருந்தவராவர். அரசகுலப் பெண்கள் கல்வி, கலை ஆகியவற்றில் சிறப்புற்றிருந்தமைக்கு இவர்களின் பாடல்கள் சான்றாகின்றன. இவர்தம் பாடல்களில் காணப்படும் அவலச் சுவையைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## ஆதிமந்தியார்

சோழ மன்னனின் செல்வமகள் ஆதிமந்தி. சேரநாட்டு வஞ்சி மன்னன் ஆட்டன் அத்தியை மணந்து கொண்டவள். அத்தியைப் போல் இவளும் ஆடலில் சிறந்து விளங்கியவள். சேர நாட்டில் வாழ்க்கைப்பட்ட ஆதிமந்தி தன் பிறந்தகமான சோழ நாட்டுக்குச் சென்றிருந்த போது தண்ணீர் நிரம்பி ஓடும் காவிரியில் நீர் விழா ஒன்று நிகழ்ந்தது. விழா நாளில் கழார் என்னும் காவிரித் துறையில் கணவனுடன் நீராடினாள். அப்போது ஏற்பட்ட வெள்ளத்தில் ஆட்டனத்தி அடித்துச் செல்லப்பட்டான். கணவனைத் தேடி 'என் கல் நவில் தோளானை என்னிடம் கொடுத்துவிடு' என்று கதறிச் சென்றதைச்

சங்க இலக்கியத்தில் வெள்ளிவீதியார்,

"........... ............ .......... யானே
காதலற் கெடுத்த சிறுமையொடு நோய் கூர்ந்து
ஆதிமந்தி போலப் பேதுற்று
அலந்தனென் உழல்வென் கொல்லோ" (அகம் 45: 12–15)

என்று பாடியதிலிருந்து அறியலாகிறது. மேலும், அகநானூறு 76: 6–7, 135: 1–6, 225: 5–12, 236: 14–21 ஆகிய பாடல்களின் வாயிலாகவும் ஆதிமந்தியின் வரலாற்றை அறியமுடிகிறது.

சிலப்பதிகாரத்தில் ஆதிமந்தியின் வரலாற்றை இளங்கோவடிகள் சிறப்பாகப் படைத்திருக்கிறார்.

"மன்னன் கரிகால்வளவன் மகள் வஞ்சிக்கோன்
தன்னைப் புனல்கொள்ளத்தான் புனலின் பின்சென்று
கல்நவில் தோளாயோ என்ன கடல் வந்து
முன்னிறுத்திக் காட்ட அவனைத் தழீஇக் கொண்டு
பொன்னம் கொடி போலப் போதந்தாள்"
(*சிலம்பு : 21, வஞ்சினமாலை : 11–15*)

இவ்வடிகளின் வழியாகவே கரிகாலன் மகள் ஆதிமந்தி என்பதை அறியமுடிகின்றது.

## ஆதிமந்தியின் பாடல்

"மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்தக் கோனை
யானும் ஓர்ஆடுகள மகளே என்கைக்
கோடீஈர் இலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலும் ஓர் ஆடுகள மகனே" (குறுந் : 31)

இப்பாடலில் மாண்புடைய தகுதி படைத்தவனான தலைவனை வீரர்கள் கூடித் திரண்டிருக்கிற சேரி விழாவினிடத்து நான் பார்க்கவில்லை; பொதுமகளிர் தமக்குரிய காதல் தலைவனைத் தழுவியாடும் துணங்கைக் கூத்தினும் என் தலைவரைப் பார்க்கவில்லை. நானும் ஓர் ஆடுகள மகள் ஆகிவிட்டேன். என் கையில் உள்ள சங்கு வளையல்கள் கையைவிட்டு நெகிழ்ந்து கழன்றன. தலைவனும் என்னைவிட்டுப் பிரிந்துவிட்டான். அவனும் ஆடுகளத்திற்கு உரியவன் ஆகிவிட்டான் என்று ஆதிமந்தி பாடுகிறாள்.

ஆதிமந்தியின் பாடலில் தலைவனின் பிரிவுத் துயர் நன்கு விளங்குகிறது. வெள்ளிவீதியார் பாடியுள்ள அகம் 45–ஆம் பாடலில்,

"ஆதிமந்திபோலப் பேதுற்று
அலந்தனென் உழல் வென் கொல்லோ" (அகம் 45 14–15)

என்று ஆதிமந்தியைக் குறிப்பிடுமளவிற்கு இவளது நிலை இரங்கத்தக்கதாக இருக்கின்றது.

## பாரி மகளிர்

கடையேழு வள்ளல்களுள் ஒருவன் பாரி. பறம்புமலையை ஆண்டு வந்தவன்.

"சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரல்
பரம்பிற் கோமான் பாரி" (சிறுபாணாற்றுப்படை 88–91)

முல்லைக்குத் தேர் தந்த வள்ளல் எனக் குறிப்பிடுகின்றது. பாரி வள்ளல்தன்மை உடையவன் என்பதை அகம் 77:22–23,158: 1–7, புறம்:107 போன்ற பாடலடிகளின் வாயிலாக அறியமுடிகின்றது.

இப்பாரி மன்னனைச் சேர, சோழ, பாண்டிய மூவேந்தரும் வஞ்சித்துக் கொன்றுவிட்டனர். அந்நிலையில் ஆதரவு அற்ற

அனாதை ஆயினர் பாரியின் பெண் பிள்ளைகள். அவர்தம் பெயர் அங்கவை, சங்கவை. தந்தை இறந்த பின்பு நெருங்கிய நண்பரும், புகழ்பெற்ற புலவருமான கபிலர் அவர்களை அழைத்துக் கொண்டு விச்சிக்கோனிடமும், செல்வக் கடுங்கோ வாழியாதனிடமும் சென்ற செய்தியை இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

வேள் பாரியின் புகழையும், அவர் கொடைச் சிறப்பினை, 'பாரியிருந்த காலத்தில், ஒரு பக்கம் அருவிகள் ஒலிக்க, மற்றொரு பக்கம் தன்பால் வந்த பாணருக்குத் தரும் பொருட்டு வடிக்கப்படும் இனிய கள், அருவி போலக் கற்களையுருட்டிக் கொண்டோடும்' என்று கூறும் பாரியின் சிறப்பினை,

"ஒருசா ரருவி யார்ப்ப வொருசார்
பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்
வாக்க வுக்க தேக்கட் டேறல்
கல்லலைத் தொழுகு மன்னே"

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

## பாரி மகளிர் பாடல்

"*அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவில்*
எந்தையும் உடையேம்எம் குன்றும் பிறர்கொளார்
*இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவில்*
வென்றுஎறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே" - (புறம்:112)

கடந்த மாதம் முழு நிலவு நாளன்று எங்கள் தந்தையுடன் சேர்ந்திருந்தோம். அப்போது பறம்பு மலையும் எங்கள் நாடாக இருந்தது. இந்த வெண்ணிலா நாளன்று எங்களுடைய பறம்பு மலையை வேந்தர்கள் கவர்ந்து கொண்டனர்; எங்களது தந்தையையும் இழந்து நிற்கிறோம் என்று பாடுகிறார்கள். தந்தை இழந்து தவிக்கின்ற திருமணம் ஆகாத இளம் பெண்கள் தந்தை மீதும் தாய் நாட்டின் மீதும் வைத்திருந்த பாசத்தை, பிரிவுத் துயரத்தை அறியமுடிகின்றது.

## பெருங்கோப் பெண்டு

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் மனைவி பெருங்கோப் பெண்டு. கணவன் இறந்துபட உயிர் துறக்க விரும்பினாள். தீப்பாய்ந்து உயிர் துறக்க வேண்டாம் என்று தடுக்கின்றனர். பெருங்கோப்பெண்டு மறுத்துக் கூறிய கூற்றில் தம் வாயினாலேயே கைம்பெண் நிலையை விளக்குகிறார். அரசப் பெண்டிராயினும் கைம்மை ஒழுங்கு விடவில்லை.

நெய் கலப்பில்லாத நீர்ச்சோற்றை உண்ண வேண்டும். எள் துவையல், புளியிட்ட வேளைக்கீரை மட்டுமே துணைக்குச் சேர்த்துக் கொள்ளப் பெறுதல் வேண்டும். மெத்தையில் அல்லது பாயில் படுக்கலாகாது. கற்கள் நிறைந்த வெறுந்தரையில் படுத்து உறங்க வேண்டும் என்கிற கைம்மை நோன்பின் கடுமையைத் தன் பாடலில் விளக்கியுள்ளார். தன் கணவனின் பிரிவைத் துயரைப் பாடலில் பதிவு செய்துள்ளார்.

## பெருங்கோப் பெண்டு பாடல்

"பல்சான்றீரே பல்சான்றீரே
......... ............... ............ .............
........ ................ ............ .............
பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்புஅற
வள்இதழ் அவிழ்த்த தாமரை
நள்இரும் பொய்கையும் தீயும் ஓரற்றே" - (புறம் 246: 1–15)

கணவன் இல்லா நிலையில் குளிர்ந்த குளத்து நீரில் மூழ்கிக் குளித்தலும், தீயில் பாய்தலும் ஒரு தன்மையனவே என்று குறிப்பிடுகிறாள்.

"இன்னுயிர் நடுங்கும் தன்இளமை புறங்கொடுத்தே"
(புறம் 247: 1–10)

பெருங்கோப் பெண்டு முதியவள் அல்ல; வயதில் இளையவள்

என்பதைப் பேராலவாயர் என்னும் புலவர் தம் பாட்லில் பதிவு செய்துள்ளார்.

சங்ககாலத்தில் இறந்த கணவன் அரசனாகவே இருந்தாலும் அவன் மனைவி தொடர்ந்து வாழ விரும்புவதில்லை என்பதை இப்பாடல் தெளிவாகக் காட்டுகிறது.

## முடிவுரை

சங்ககால அரசவைப் பெண்டிர் செல்வச் செழிப்பில் மட்டுமல்ல கல்வியிலும், கலையிலும், பண்பாட்டிலும் சிறந்து விளங்கியவர்களாகவே இருந்துள்ளனர். அந்தப்புரத்தில் செல்வச் செழிப்பில் வாழ்ந்தாலும் தம் உறவுக்குத் தீங்கென்றால் கண்ணீரில் காயம் துடைத்தவர்கள் ஒரு சிலரே. அந்தவகையில் ஆதிமந்தி, பாரி மகளிர், பெருங்கோப்பெண்டு ஆகிய மூன்று அரசவைப் பெண்டிர் பாடிய பாடல்கள் அனைத்தும் பிரிவுத் துன்பத்தையே விளக்குவதாக உள்ளன என்பது புலனாகிறது. ஆதிமந்தி அகத்திணையிலும், பாரிமகளிர், பெருங்கோப் பெண்டு புறத்திணையிலும் பாடல்களைப் பாடியுள்ளனர். பிரிவு என்ற நிலையில் மூவரும் பாடிய பாடல்கள் கையறுநிலைப் பாடல்களாகக் கொள்ளலாம். ஆதிமந்தி தனது காதலன் பிரிவையும், பாரி மகளிர் தன் தந்தையின் பிரிவையும், பெருங்கோப் பெண்டிடு தன் கணவனின் பிரிவையும் பாடலாகப் புனைந்துள்ளனர். அரசவைப் பெண்டிரின் பாடல்கள் அனைத்தும் அவலச் சுவை உடையன என்பது புலனாகிறது.

## பார்வை நூல்கள்

1. சங்க இலக்கிய பொருட் களஞ்சியம் (தொகுதி–II),

2. தாயம்மாள் அறவாணன், மகடூஉ முன்னிலை, பச்சைப்பசேல், 15, முனிரத்தினம் தெரு, அய்யாவு (நாயுடு) குடியிருப்பு, அமைந்தகரை, சென்னை–600 029.

# ஏழில் ஐந்து

ஆறுவிரல் ஐம்பொறி
விரசோழபுரம்,
கள்ளக்குறிச்சி வட்டம், விழுப்புர மாவட்டம்

செம்மொழியாம் தமிழ் மொழியில் உள்ள மேல் கணக்கு நூல்களிலும் கீழ் கணக்கு நூல்களிலும் உவமைகள் நிறைந்துள்ளன. கம்பரின் காதையில் உள்ள உவமைகள் கணக்கில் அடங்கா. பக்தி இலக்கியங்களிலும், காப்பியங்களிலும் பல இடங்களில் உவமைகள் உள்ளன.

உவமை, பொருள் விளக்கம் செய்கிறது. அது பொருளை உயர்ந்த பொருளோடு ஒப்பிட்டு நோக்குகிறது. அஃது இன்பத்தைத் தோற்றுவிக்கிறது. இவ் வுவமத்தினை நான்கு வகைகளாகத் தொல்காப்பியம் உணர்த்துகிறது.

"வினைபயன் மெய்யுரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்"

(தொல்காப்பியம் –உவமையியல் : 1)

புலி போலப் பாய்ந்தான் – வினையுவமை
மாரியன்ன வண்கை – பயனுவமை
துடிபோலும் இடை – மெய்யுவமை
தளிர் போலும் மேனி – உருவுவமை

ஓர் உவமை கூறவேண்டுமானால் பொருள், உவமை, உவமஉருபு என மூன்று சொற்கள் தேவை. உவமவுருபு இல்லாமலும் உவமை கூறலாம். இஃது எடுத்துக்காட்டுவமை அணியின் பாற்படும். பவளவாய், குயில்மொழி முதலிய உவமைகளில் உவமவுருபுகள் இல்லை. உவமையில் பொருளையும், உவமையையும் கூறுவது இன்றியமையாத் தேவை ஆகும். இவை இரண்டும், உயிரும் உடலும் போன்றவை.

ஏழு சீர்களில் ஐந்து உவமைகளைக் கூறமுடியுமா? ஏழு சீர்களில் ஐந்து உவமைகள் எனில் உவம உருபுகளை சொல்லாதொழிந்தால்கூட ஐந்து பொருள்களும் ஐந்து உவமைகளும் ஆக பத்து சொற்கள் ஏழு சீர்களுக்குள் அடங்க வேண்டுமல்லவா? இஃது இயலுமா?

ஏழு சீர்களில் பொய்யாமொழி ஐந்து உவமைகளை அழகாகக் கூறியுள்ளார். வியப்பாக இருக்கிறதா? இதோ அந்த குறட்பா,

"முறிமேனி முத்தம் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்தோ ளவட்கு" - குறள்: 113

| | | |
|---|---|---|
| உவமை – 1 முறிமேனி | – | மேனி முறியைப் (மாந்தளிரைப்) போன்றது. |
| உவமை – 2 முத்தம் முறுவல் | – | முறுவல் (பல்) முத்தைப் போன்றது. |
| உவமை – 3 வெறி நாற்றம் | – | மேனியின் நாற்றம் வெறி (வாசனைப் பொருள்) போன்றது. |
| உவமை – 4 வேலுண்கண் | – | கண் வேல் போன்றது. |
| உவமை – 5 வேய்தோள் | – | தோள், வேய் (மூங்கில்) போன்றது. |
| அவட்கு | – | என் காதலிக்கு |

இக்குறட்பாவில் ஐந்து உவமைகளில் பத்து சொற்கள் உள்ளன. ஏழாவது சீரில் பொருள் முடிபுக்கு அவட்கு என்ற சொல் உள்ளது. வேலுண்கண் என்ற சீரில் உண் என்ற அடைச்சொல்லும் உள்ளது. ஏழு சீர்களில் பன்னிரண்டு சொற்கள். என்னே இக்குறளின் அருமை!

வள்ளுவர் கடுகைத் துளைத்தெழுகடலைப் புகுத்தியவரா? இல்லை. இல்லை. அணுவைத் துளைத்தெழுகடலைப் புகுத்தியவர் என்பதே உண்மை.

❋✳✳✳❋

# வாசகர் வாசகம்

மதிப்பிற்குரிய அய்யா,

பொருள்: தமிழ் உயிர் மெய் எழுத்து குறியீடுகள் சீர்திருத்த மாற்றம் தொடர்பாக.

தமிழ் எழுத்து வாக்கியங்கள் விரைவாக எழுதுவதற்கும், தமிழ் தட்டச்சு, தமிழ் கணினி ஆகியவைகள் சுலபமாக விரைவாக கையாள்வதற்கும் தமிழ் உயிர் மெய் எழுத்து குறியீடுகளில் சீர்திருத்தமாற்றம் தொடர்பாக அவசியமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது நடைமுறையில் 12 உயிர் எழுத்துக்களுக்கு 49 உயிர்மெய் எழுத்து குறியீடுகள் மெய் எழுத்துக்களுக்கு இடம், வலம், மேல், கீழ் ஆகிய பக்கங்களில் எழுதப்படுகின்றன.

தமிழ் எழுத்துக்கள் இடமிருந்து வலப்பக்கமாகவும் வாக்கிய வரிகள் மேலிருந்து கீழாகவும் வரிசையாக எழுதப்படுகின்றன. எனவே ஒரு உயிர் எழுத்து, ஒரு ஒற்றை உயிர்மெய் எழுத்து குறியீடு விதம் 12 உயிர் எழுத்துக்களுக்கு 12 உயிர்மெய் எழுத்து குறியீடுகள் மெய் எழுத்துக்களுக்கு வலப்பக்கம் மட்டும் மாற்றி எழுதப்பட வேண்டும், மேலும் குறியீடுகள் மெய் எழுத்துக்களுக்கு மேல், கீழ் பக்கங்களுக்கு மிகாமல் மெய் எழுத்துக்கள் அளவிற்குள் மட்டும் எழுதப்படவேண்டும்.

இ,ஈ ஆகிய உயிர் எழுத்துக்களின் உயிர்மெய் எழுத்து குறியீடுகள் முறையே (உ.ம்) கி, கீ என்று மெய் எழுத்துக்களுக்கு மேல் பக்கம் எழுதப்படுகின்றன. க்ஷ குறியீடுகள் முறையே (உ.ம்) க,கெ என்று மெய் எழுத்துக்களுக்கு வலப்பக்கம் மாற்றி எழுதப்பட வேண்டும்.

உ,ஊ ஆகிய உயிர் எழுத்துக்களின் உயிர்மெய் எழுத்து குறியீடுகள் முறையே, 18,18 எனப் பலவித குறியீடுகள் எழுதப்படுகின்றன. க்ஷ பலவித குறியீடுகளுக்குப் பதிலாக ஒற்றை புதிய குறியீடாக மாற்றி முறையே (உ.ம்) க, க என்று மெய் எழுத்துக்களுக்கு வலப்பக்கம் எழுதப்படவேண்டும்.

எ, ஏ, ஐ ஆகிய உயிர்எழுத்துக்களின் உயிர்மெய் எழுத்து குறியீடுகள் முறையே (உ.ம்) கெ,கே,கை என்று மெய் எழுத்துக்களுக்கு இடப்பக்கம் எழுதப்படுகின்றன. க்ஷ குறியீடுகள் முறையே

(உ.ம்)கெ,கே, கை என்று மெய் எழுத்துக்களுக்கு வலப்பக்கம் மாற்றி எழுதப்படவேண்டும்.

ஒ, ஓ, ஔ ஆகிய உயிர் எழுத்துக்களின் உயிர் மெய் எழுத்து குறியீடுகள் முறையே (உ.ம்) கொ, கோ, கௌ என்று மெய் எழுத்துக்களுக்கு இடம், வலம் பக்கங்களில் இரட்டை குறியீடுகள் எழுதப்படுகின்றன. க்ஷ இரட்டை குறியீடுகளுக்குப் பதிலாக ஒற்றை புதிய குறியீடாக மாற்றி முறையே (உ.ம்) கɷ, கɞ, கள என்று மெய் எழுத்துக்களுக்கு வலப்பக்கம் எழுதப்படவேண்டும்.

12 உயிர்மெய் எழுத்து ஒற்றை குறியீடுகள் 18 மெய் எழுத்துக்களுக்கு வலப்பக்கம் மட்டும் மாற்றி எழுதுவது தொடர்பான விபரம்

| உயிர் எழுத்து<br>மெய் எழுத்து | அ | ஆ<br>ா | இ<br>C | ஈ<br>e | உ<br>ɔ | ஊ<br>ɜ | எ<br>ெ | ஏ<br>ே | ஐ<br>ை | ஒ<br>ɷ | ஓ<br>ɞ | ஔ<br>ள |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கC | கe | கɔ | கɜ | கெ | கே | கை | கɷ | கɞ | கள |
| ங் | ங | ஙா | ஙC | ஙe | ஙɔ | ஙɜ | ஙெ | ஙே | ஙை | ஙɷ | ஙɞ | ஙள |
| ச் | ச | சா | சC | சe | சɔ | சɜ | செ | சே | சை | சɷ | சɞ | சள |
| ஞ் | ஞ | ஞா | ஞC | ஞe | ஞɔ | ஞɜ | ஞெ | ஞே | ஞை | ஞɷ | ஞɞ | ஞள |
| ட் | ட | டா | டC | டe | டɔ | டɜ | டெ | டே | டை | டɷ | டɞ | டள |
| ண் | ண | ணா | ணC | ணe | ணɔ | ணɜ | ணெ | ணே | ணை | ணɷ | ணɞ | ணள |
| த் | த | தா | தC | தe | தɔ | தɜ | தெ | தே | தை | தɷ | தɞ | தள |
| ந் | ந | நா | நC | நe | நɔ | நɜ | நெ | நே | நை | நɷ | நɞ | நள |
| ப் | ப | பா | பC | பe | பɔ | பɜ | பெ | பே | பை | பɷ | பɞ | பள |
| ம் | ம | மா | மC | மe | மɔ | மɜ | மெ | மே | மை | மɷ | மɞ | மள |
| ய் | ய | யா | யC | யe | யɔ | யɜ | யெ | யே | யை | யɷ | யɞ | யள |
| ர் | ர | ரா | ரC | ரe | ரɔ | ரɜ | ரெ | ரே | ரை | ரɷ | ரɞ | ரள |
| ல் | ல | லா | லC | லe | லɔ | லɜ | லெ | லே | லை | லɷ | லɞ | லள |
| வ் | வ | வா | வC | வe | வɔ | வɜ | வெ | வே | வை | வɷ | வɞ | வள |
| ழ் | ழ | ழா | ழC | ழe | ழɔ | ழɜ | ழெ | ழே | ழை | ழɷ | ழɞ | ழள |
| ள் | ள | ளா | ளC | ளe | ளɔ | ளɜ | ளெ | ளே | ளை | ளɷ | ளɞ | ளள |
| ற் | ற | றா | றC | றe | றɔ | றɜ | றெ | றே | றை | றɷ | றɞ | றள |
| ன் | ன | னா | னC | னe | னɔ | னɜ | னெ | னே | னை | னɷ | னɞ | னள |

உயிர்மெய் எழுத்து குறியீடுகள் 49லிருந்து 12ஆக குறைவதால் தமிழ் எழுத்து வாக்கியங்கள் விரைவாக எழுத இயலும்.

குறியீடுகள் 49லிருந்து 12 ஆகக் குறைவதால், தமிழ் தட்டச்சு, தமிழ் கணினி ஆகியவைகள் அளவில் சிறியதாகவும், கையடக்கமாகவும் இருக்குமாதலால் ஷ தட்டச்சு, கணினி ஆகிய்வைகளைச் சுலபமாக விரைவாகக் கையாள இயலும்.

குறியீடுகள் 49லிருந்து 12 ஆக குறைவதால் தமிழ்மொழி தெரியாத பிற மொழியாளர்கள் தமிழ் மொழியைச் சுலபமாக கற்றுக்கொள்ள இயலும்.

தினசரி, வாரம், மாதப் பத்திரிகைகளின் அச்சகங்களில் (49–12) 37 தேவையற்ற குறியீடுகள் தொடர்பான தயாரிப்புச் செலவு பலகோடி ரூபாய் இழப்பு தவிர்க்கப்படும்.

எனவே தற்போது நடைமுறையிலுள்ள 49 உயிர் மெய் எழுத்து குறியீடுகளுக்குப் பதிலாக 12 உயிர்மெய் எழுத்து ஒற்றைக் குறியீடுகள் மெய் எழுத்துக்களுக்கு வலப்பக்கம் மட்டும் மாற்றி எழுதுவதற்கு விரைவில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். நன்றி, வணக்கம்.

தங்கள் அன்புள்ள,
என். எஸ். சுந்தரராசன்
34, நாகசாமி நகர், திருமங்கலம் 625 706,
மதுரை மாவட்டம்.

✪✪✪✪✪✪✪✪✪

அன்பார்ந்த அழகுமலை ஆசிரியர் ஐயா அவர்களுக்கு, பணிந்த வணக்கம்.

இத்துடன் செந்தமிழ் இதழிற்குக் கட்டுரை இணைத்துள்ளேன். வெளியிட வேண்டுவன். தங்கள் முயற்சியில் இதழ் மணக்கிறது. சிறக்கிறது. 'மென்மேலும் வளர்ந்தோங்கிட அன்பின் வாழ்த்துக்கள். என்றும் தங்கள் அன்பை விரும்பும்,

அரசக்கண்ணான்
11, பங்களாத் தெரு,
மானம்புச்சாவடி, தஞ்சாவூர் 1

மதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு,

வணக்கம். நலம் வேண்டும். 'செந்தமிழ்' இதழ் சிறப்பாக வந்து கொண்டிருக்கிறது. கட்டுரைகள் பயனுள்ளவையாக இருக்கின்றன. இன்னும் ஆழமும் கனமும் கொண்ட கட்டுரைகளை எதிர்பார்க்கிறோம்.

செந்தமிழ்த் தொகுதிகளை மீண்டும் அச்சிடும் முயற்சி எந்நிலையில் உள்ளது?

கணிப்பொறி வழிப் "படித்தெழுதும்" (ஸ்கேன்) வகையில் அச்சிடல் குறித்துத் தெரிவித்த கருத்தை ஆய்வு செய்தீர்களா?

தங்கள் அன்பான மடலை எதிர்பார்க்கிறேன்.

ஓய்வு பெற்று (31.05.2008) விட்டதால், பயனுள்ள பணிகளில் ஈடுபட முயன்று வருகிறேன். 'செந்தமிழ்' தொகுதிகள் அனைத்தும் மீண்டும் அறிவுக்கு வழங்கும் முயற்சி மிக நல்ல முயற்சி. என் இனிய பங்களிப்பைச் செய்ய விரும்புகிறேன்.

தமிழாய்வை முன்னெடுத்துச் செல்லும் முயற்சிகளில் ஒன்றாக, ''ஆய்வுத்தமிழ்'' – பணிக்களத்தைத் தொடங்கியுள்ளோம். அறிக்கை இணைத்துள்ளேன். நம் ''செந்தமிழ்'' இதழில் வெளியிட்டு உதவ அன்புடன் வேண்டுகிறேன். நன்றிகள். தங்கள் பணி அழைப்பை எதிர்பார்த்து,

இனிய தமிழுணர்வோடு,

முனைவர் பூந்துறையான் (வெ.இரத்தினமூர்த்தி)
337, திருவள்ளுவர் நகர்,கள்ளிப்பட்டி 638 505,
ஈரோடு மாவட்டம்.

நெஞ்சிற்கினிய செந்தமிழ் ஆசிரியர் ஐயா இரா.அழகுமலை அவர்களுக்கு,

வணக்கம். தங்கள் நலம், தலைவர் மன்னர் சேதுபதி அவர்கள் நலம், ஆசிரியர் குழுவினர் நலம் அறிய ஆவல்.

தொடர்ந்து வரும் 'செந்தமிழ்' தமிழ் விருந்து படைக்கிறது. சுவைத்துப் போற்றுகின்றேன். வாசிப்பதற்கான வழித்தடங்களை ஏற்படுத்தும் நுழைவாயிலே நூல் மதிப்புரை என்ற அற்புத வரிகளால் குறிப்பிட்டு, தாங்களே 'வசந்தப் பரவல்' போன்ற நூல்களுக்குப் பெரும் உழைப்பேற்று நூல் மதிப்புரை தீட்டுவது மட்டிலா மகிழ்வூட்டுகிறது. படைப்பாளர்கள் உளமார தங்களை வாழ்த்தி போற்றுவார்கள். ஏனைய கட்டுரைக் கனிகளும் இனிப்பூட்டின. தங்கள் ஒப்பரிய தமிழ்த்தொண்டு காலத்தால் போற்றப்படுவது திண்ணம்.

வாழிய தாங்கள்.


கவிவேந்தர் கா.வேழவேந்தன் பி.ஏ., பி.எல்<br>
முன்னாள் அமைச்சர்<br>
78/103, டாக்டர் இராதா கிருட்டிணன் சாலை,<br>
மயிலாப்பூர், சென்னை 600 004

மதிப்புயர் செந்தமிழ் ஆசிரியப் பெருந்தகை அவர்கட்கு! வணக்கம்.

பைந்தமிழ்ப் பாண்டித்துரைத்தேவர் புகழ்பரப்பும் மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாகிய "செந்தமிழ்" இதழுக்கு தேவரின் தமிழ்த் தொண்டுக்குக் காரணமாயிருந்த கடலூர் (திருப்பாதிரிப்புலியூர்) சிவத்திரு ஞானியார் அடிகள் பாவூட்டியதைக் கவியாக்கி அனுப்பியுள்ளேன்.

தொகுதி 102, பகுதி 6, சூன் 08 –இதழில் திரு.கருவை பழனிசாமி எழுதிய "திருக்குறளில் கருத்தியல் போர்" என்ற கட்டுரை அருமையான ஆய்வு. பொறையுடைமைக்கு முன் பிறனில்விழையாமை இருப்பதற்குக் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர் ஓர் அரிய கற்பனையைக் கூறினார். அதாவது சிவபெருமான் இயற்பகை நாயனார் மனைவியை விரும்பியதால் பார்வதி பொறுத்துக் கொண்டாராம். ஏனென்றால் நெறியின் நீங்கிய செய்தாரையும் பொறுக்க வேண்டும் என்பதற்காகப் பிறனில் விழையாமையின் பின் பொறையுடைமை வைக்கப்பட்டது என்ற பரிமேலழகரின் கருத்துப் பொருத்தத்திற்கு – இது உரைப் பெருமை!.

இப்படி நல்ல ஆய்வுகளால் "செந்தமிழ்" பழம் புகழ்மேனியும் புதுப்புகழ் பதுக்கியும் வருகிறது. பாராட்டுக்கள். நன்றி.

அன்புடன்,

தெ.முருகசாமி,

முன்னாள் முதல்வர், இராமசாமி தமிழ்க் கல்லூரி,

காரைக்குடி.

# பெட்ரோல் விலையைக் கட்டுப்படுத்த கூட்டு நடவடிக்கை



## உலகநாடுகளிடம் பிரதமர் மன்மோகன்சிங் வலியுறுத்தல்

புதுதில்லி, ஜூலை6 : பெட்ரோல் விலை உயர்வைக் கட்டுப்படுத்த கூட்டு நடவடிக்கை எடுப்பது அவசியம் என்று உலக நாடுகளிடம் பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தி உள்ளார்.

ஜி 8 நாடுகளின் உச்சி மாநாட்டில் பங்கேற்க ஜப்பான் தலைநகர் டோக்கியோவுக்கு திங்கள் கிழமை புறப்படுகிறார் மன்மோகன் சிங். மாநாட்டில் இந்தியாவின் தரப்பில் எழுப்பப்படும் பிரச்சனைகள் குறித்து அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

இன்று உலகையே அச்சுறுத்தி வரும் புவி வெப்பமடைதல், உணவுப் பற்றாக்குறை, எரிபொருள் விலை உயர்வு ஆகிய விஷயங்களில் உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்தியா தனது யோசனைகளைச் சமர்ப்பிக்கும்.

புவி வெப்பமடைவதால் ஏற்படும் பருவநிலை மாற்றம், உணவுப் பற்றாக்குறை, எரிபொருள் தட்டுப்பாடு ஆகிய பிரச்சனைகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. எனவே இப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண ஒருங்கிணைந்த அணுகுமுறை தேவை என்ற இந்தியாவின் கருத்து உலக நாடுகளிடம் வலியுறுத்தப்படும்.

உலக பொருளாதாரம், வளர்ச்சி, வர்த்தகம், தொழில் நுட்பப் பரிமாற்றம், உணவு மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டைச் சமாளிப்பது ஆகியவற்றில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து மாநாட்டில் விளக்கப்படும். குறிப்பாக அண்மைக்காலமாக பெட்ரோலியப் பொருள்கள் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்து வருவதை உலக நாடுகளின் கவனத்துக்கு இந்தியா

எடுத்துச் செல்லும். விலை உயர்வைக் கட்டுப்படுத்த பெட்ரோலியம் உற்பத்தி செய்யும் நாடுகளும் அதை வாங்கும் நாடுகளும் கூட்டாகச் சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்படும். ஜி 8 நாட்டுத் தலைவர்களைச் சந்திப்பதற்கு முன் மெக்சோ ஏற்பாடு செய்துள்ள ஓ–5 நாட்டுத் தலைவர்களைச் செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேச உள்ளேன்.

இதற்கு முன் நடைபெற்ற ஜி8 நாடுகளின் மாநாடு மற்றும் ஓ–5 நாடுகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையிலும் உலக விவகாரங்களில் இந்தியா தனது நிலையைத் தெளிவுபடுத்தி வந்துள்ளது. இந்தியாவின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன. உலகை அச்சுறுத்தும் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண்பதில் இந்தியாவின் பங்களிப்புத் தேவை என்பதை அந்த நாடுகள் அங்கீகரித்துள்ளன.

பொருளாதாரத்தில் முன்னேறிய நாட்டுத் தலைவர்களைச் சந்தித்து புவி வெப்பமடைதல் விவகாரம் குறித்து பேச உள்ளேன்.

வளரும் நாடுகளின் முன்னேற்றத் திட்டங்களைக் கருத்தில் கொள்ளாமல் புவி வெப்பமடைதல் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியாது. எங்களை (இந்தியா) பொருத்தவரை வறுமை ஒழிப்புக்குத்தான் அதிமுக்கியத்துவம், வறுமை ஒழிப்புக்கு அதிவேக பொருளாதார வளர்ச்சி அவசியமாகிறது என்றார் மன்மோகன் சிங். மாநாட்டையொட்டி பல்வேறு நாட்டுத் தலைவர்களைப் பிரதமர் மன்மோகன் சிங் சந்தித்துப் பேசுகிறார்.

***நன்றி : தினமணி ஜூலை 6, 2008***

தொடர்பு முகவரி :

**ஆசிரியர், செந்தமிழ்,**

**மதுரைத் தமிழ்ச்சங்கம்,**

**மதுரை–625001.**

தொலைபேசி : **0452-6575615**

RNI Regd. No.: 5508/56 August 2008


## ஆசிரியர் குழு

டாக்டர் திரு. ந. சேதுராமன்

திரு. இரா. குருசாமி

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் கதிர் மகா்தேவன்



அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA


பெறுநர் / To,


பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ. எம்.ஃபில்.,
செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.
தொலைபேசி : (0452) 6575615

அச்சிடுவோர் : **ஆசை அச்சகம்,** சாரதா காம்ப்ளக்ஸ், சிம்மக்கல், மதுரை–1.
தொலைபேசி : (0452)2622250, கைபேசி : 98434 32484